*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 1157/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-12 (LW-21)***

*Name / Father's Name:* ***திருமதி.சரஸ்வதி க/பெ. சின்னதம்பி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.05.2026.**

துவக்க நேரம் 01.05 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி புகழேந்திரன், பூங்கொடியை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். விபத்தில் இறந்த ராமராஜன் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 4-5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தென்னங்குடிபாளையத்தில் ஒருவரின் இறப்பிற்காக நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த சுமார் 25ற்கும் மேற்பட்ட நபர்களும் செந்தாரப்பட்டியிலிருந்து நான்கு சக்கர ஆட்டோவில் காலை நேரத்தில் கிளம்பி தென்னங்குடிபாளையம் சென்று, இறுதிசடங்கு முடிந்தவுடன் அதே நான்கு சக்கர ஆட்டோவில் அனைவரும் செந்தாரப்பட்டிக்கு திரும்ப வந்துகொண்டிருந்தோம்.

2) நாங்கள் வந்த ஆட்டோவின் பதிவு எண் தெரியாது. நாங்கள் பின்னால் நின்றுகொண்டு வந்தோம், அதனால் அந்த ஆட்டோவின் ஓட்டுனர் யார் என்று தெரியாது. அன்று மதியம் சுமார் 02.30 மணியளவில் ஆத்தூரிலிருந்து தம்மம்பட்டி நோக்கி சென்றுகொண்டிருந்தபொழுது மேல்கணவாய் தாண்டி சென்றுகொண்டிருந்தோம்.

3) அப்பொழுது ஆட்டோவிற்கு எதிரே இரண்டு இருசக்கர வாகனங்கள் வந்ததால், அந்த வாகனத்தின் மீது மோதாமல் இருக்க எங்கள்

வாகனத்தை ஓட்டிவந்த தம்பி வாகனத்தை நகர்த்தியபொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டது. அதில் இருந்த எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்கள் அனைவரையும் அருகில் இருந்தவர்கள், 108 ஆம்புலன்சு மூலம் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எங்களில் காயம்பட்ட ராமராஜ் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள் என்று கேள்விபட்டேன்.

4) இந்த விபத்து இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருக்க நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் ஒதுங்கி நிறுத்தியதால் ஏற்பட்டது. நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனரின் பெயரையோ, விவரத்தையோ தெரிந்துகொள்ளவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிதான், நாங்கள் சென்ற ஆட்டோவை ஓட்டிச்சென்றாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆட்டோவின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்பொழுது சொன்ன விவரத்தைத்தான் எனது போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

2) நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் இரண்டு இருசக்கர வாகனங்களில் ஒன்று சேர்ந்தார்போல் வந்தார்களா என்றால் வந்ததாக கேள்விபட்டேன். அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள், நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது மோதுவது போல் வந்ததால் விபத்தை தவிர்ப்பதற்காக நாங்கள் சென்ற ஆட்டோ ஓட்டுனர் இடதுபுறமாக திருப்பும்பொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டதா என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 01.17 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.05.14 16:39:58 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 1157/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-13 (LW-33)***

*Name / Father's Name:* ***திருமதி.ராதா க/பெ. செல்வக்குமார்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.05.2026.**

துவக்க நேரம் 01.18 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி புகழேந்திரன், பூங்கொடியை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். விபத்தில் இறந்த ராமராஜன் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 5-6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தென்னங்குடிபாளையத்தில் ஒருவரின் இறப்பிற்காக நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த சுமார் 28 ற்கும் மேற்பட்ட நபர்களும் செந்தாரப்பட்டியிலிருந்து நான்கு சக்கர ஆட்டோவில் காலை நேரத்தில் கிளம்பி தென்னங்குடிபாளையம் சென்று, இறுதிசடங்கு முடிந்தவுடன் அதே நான்கு சக்கர ஆட்டோவில் அனைவரும் செந்தாரப்பட்டிக்கு திரும்ப வந்துகொண்டிருந்தோம்.

2) நாங்கள் வந்த ஆட்டோவின் பதிவு எண் தெரியாது. நாங்கள் பின்னால் நின்றுகொண்டு வந்தோம், அதனால் அந்த ஆட்டோவின் ஓட்டுனர் யார் என்று தெரியாது. அன்று மதியம் சுமார் 02.15 மணியளவில் ஆத்தூரிலிருந்து தம்மம்பட்டி நோக்கி சென்றுகொண்டிருந்தபொழுது மேல்கணவாய் தாண்டி சென்றுகொண்டிருந்தோம்.

3) அப்பொழுது ஆட்டோவிற்கு எதிரே இரண்டு இருசக்கர வாகனங்கள் வந்ததால், அந்த வாகனத்தின் மீது மோதாமல் இருக்க எங்கள்

வாகனத்தை ஓட்டிவந்த தம்பி வாகனத்தை நகர்த்தியபொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டது. அதில் இருந்த எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்கள் அனைவரையும் அருகில் இருந்தவர்கள், 108 ஆம்புலன்சு மூலம் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எங்களில் காயம்பட்ட ராமராஜ் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள் என்று கேள்விபட்டேன்.

4) இந்த விபத்து இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருக்க நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் ஒதுங்கி நிறுத்தியதால் ஏற்பட்டது. நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனரின் பெயரையோ, விவரத்தையோ தெரிந்துகொள்ளவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிதான், நாங்கள் சென்ற ஆட்டோவை ஓட்டிச்சென்றாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆட்டோவின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்பொழுது சொன்ன விவரத்தைத்தான் எனது போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

2) நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் இரண்டு இருசக்கர வாகனங்களில் ஒன்று சேர்ந்தார்போல் வந்தார்களா என்றால் வந்ததாக கேள்விபட்டேன். அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள், நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது மோதுவது போல் வந்ததால் விபத்தை தவிர்ப்பதற்காக நாங்கள் சென்ற ஆட்டோ ஓட்டுனர் இடதுபுறமாக திருப்பும்பொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டதா என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 01.27 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.05.14 16:40:07 +0530

Judicial Magistrate No.2, Attur.